மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

Financial Aid to Private Colleges.

*@ 192. *Q*.—Thiru K. S. GANAPATHI (on behalf of Thiru **M. RAJAH IYER**) : Will the Hon. the Minister for Education be pleased to state :—

பிற்பகல் 3-10

(*a*) whether the Government propose to extend financial aid to private colleges to enable them to give their staff the same weightage given to Lecturers in Government Colleges, as per the recommendations of the Second Pay Commission ; and

(*b*) if so, the details thereof ?

தனியார் கல்லூரிகளுக்கு நிதியுதவி.

திரு. கே. எஸ். கணபதி (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இரண்டாவது சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கிணங்க, அரசினர் கல்லூரி விரிவுரையாளர்களுக்கு கடந்த காலப் பணி அடிப்படையில் கூடுதல் ஊதிய உயர்வு அளிக்கப்படுவது போலவே, தனியார் கல்லூரி விரிவுரையாளர்களுக்கும் அளிக்க இயலும் வகையில் தனியார் கல்லூரிகளுக்கு நிதியுதவி வழங்க அரசு கருதியுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) "மான்யவிதி " மற்றும் அது சம்பந்தப்பட்ட அரசு ஆணைகளின் அடிப்படையில் தனியார் கல்லூரிகளுக்கு நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

Transfer of the Chairmen and Managing Directors of the Tamil Nadu Industrial Development Corporation.

* 203. *Q*.—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Chairmen and Managing Directors of the Tamil Nadu Industrial Development Corporation were transferred frequently during the last six years ; and

@4—12—1973 நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது.

(*b*) if so, whether the same has not affected the efficiency of the Corporation ?

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர்கள், நிர்வாக இயக்குநர்கள் மாற்றம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர்களும் நிர்வாக இயக்குநர்களும் கடந்த ஆறு ஆண்டுகளில், அடிக்கடி மாற்றம் செய்யப்பட்டனரா ?

(இ) ஆமெனில், இம்மாற்றம் காரணமாக இக்கழகத்தின் திறமை பாதிக்கப்படவில்லையா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நிர்வாகத்தின் வசதியைப் பொறுத்து, நிறுவனத்தின் செயல்திறனைப் பாதிக்காத முறையில் அலுவலர்களின் மாற்றங்கள் அவ்வப்போது செய்யப்படுகின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, கடந்த 6 ஆண்டுகளில் யார் யார் தலைவர்களாகவும் ,நிர்வாக இயக்குநர்களாகவும் இருக்கின்ருர்கள், அவர்கள் எவ்வளவு காலம் தலைவர்களாகவும், நிர்வாக இயக்குநர்களாகவும் இருந்தார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதே கணக்குப் போட்டு பார்த்துச் சொல்வதாக இருந்தால், கஷ்டமாக இருக்கும் என்று நினைக்கின்றேன். சுமார் 1968-லிருந்து 10 பேர்கள் இருந்திருக்கின்ருர்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினுக்கள் - விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி(*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

பேரவையிலிருந்து செய்தி.

MR. CHAIRMAN : I have received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Bill, 1973 (L.A. Bill No. 24 of 1972) as passed by the Legislative Assembly, and signed by him, for the concurrence of the Council.